DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.22/2024**

அ.சா.1

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | லிங்கம் | Caste: | |
| Father's/Husband Name: | பொடிசன் | Calling: | விவசாயம் |
| Village: | தெற்கு தெரு, பெரியகுளம் | Religion: | |
| Taluk: | கடலாடி | Age: | 46 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 23.02.2026

( 1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை .BNSS பிரிவு 355-ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

**முதன்மை விசாரணை**

நான் கடலாடி தாலுகா பெரியகுளம் தெற்கு தெருவில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சிகள் வெள்ளையம்மாள், மலைராஜை தெரியும். தேவராஜ் என் தம்பி, ஜெயசித்ரா என் தம்பி மனைவி, அரவிந்த் குமார் என் மகன். நான் பட்டியல் இனத்தை சேர்ந்த தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சேர்ந்தவன். ஆஜர் எதிரியை தெரியாது. அவர் என்ன சமூகத்தை சேர்ந்தவர் என்று தெரியாது. ஆஜராகாத 2ம் எதிரி முனீஸ்வரனையும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கைரேகை என்னுடையதுதான். அந்த புகாரை எதற்காக கொடுத்தேன் என்றால் சுமார் 3 வருடங்களுக்கு முன்பு எங்க ஊருக்கு வடக்கு பக்கம் தாவீது என்பவருக்கு சொந்தமான நிலத்தில் கடலை விவசாயம் செய்திருந்தேன். அந்த வயலில் கிருஷ்ணாபுரத்தை சேர்ந்தவர்களின் மாடும், மாரியூரை சேர்ந்தவர்களின் மாடும் மேய்ந்து

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.23 15:57:10 +0530

கொண்டிருந்தது. பகல் 1.00 மணியளவில் மேய்ந்து கொண்டிருந்ததை விரட்டி சென்றேன். அப்போது அங்கு இருந்த ஆஜர் எதிரி மற்றும் இருநபர்கள் எந்த ஊர் என்று கேட்டார்கள். நான் பெரியகுளம் என்று சொன்னேன். என்ன சாதி என்று கேட்டார்கள்.அவ்வாறு கேட்டது ஆஜர் எதிரி முனீஸ்வரன் . நான் தேவேந்திர குல வேளாளர் என்று சொன்னேன். முனீஸ்வரன் நாங்கள் நின்று கொண்டிருக்கிறோம், நீ என்னடா பள்ளப்பய எங்களை மதிக்காமல் போய்க்கொண்டிருக்கிறாய் என்று கையை மடக்கிக்கொண்டு எனது மூக்கில் ஓங்கி குத்திவிட்டார். அவரோடு வந்த மற்றொருவர் முதுகில் குத்தினார். இன்னும் ஒருவர் கம்பால் அடித்தார். அப்போது வெள்ளையம்மாளும் முத்துராமலிங்கமும் அந்த பக்கம் இருந்து வந்து எதிரிகளை சத்தம் போட்டு விரட்டிவிட்டார்கள். நான் மூக்கில் வழிந்த இரத்தத்தோடு ரோட்டில் சென்றுகொண்டிருந்தபோது என் தம்பி தேவராஜும் அவரது மனைவி ஜெயசித்ராவும் வந்தவர்கள் என்னை மறைத்து ஏண்ணே மூக்கில் எப்படி காயத்தோடு வருகிறாய் என்று கேட்டார். பின்பு எனது மகன் அரவிந்த் குமாருக்கு போன்மூலம் தகவல் சொல்லி வரவைத்தார்கள். பின்பு சாயல்குடி காவல்நிலையம் சென்று என்னை அடித்து காயப்படுத்தியவர்மீது நான் சொல்ல சொல்ல என் மகன் எழுதி நடவடிக்கை எடுக்க புகார் மனு கொடுத்தோம். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1**. பின்பு என்னை கடலாடி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். அங்கு முதலுதவி சிகிச்சை செய்து மேல்சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு மூன்று நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். முத்துராமலிங்கம் என்பவர் என் தங்கச்சி மகன்கள்தான் சம்பவத்தில் ஈடுபட்டது என்று சொன்னார். இந்த வழக்கு சம்பந்தமாக டிஎஸ்பி

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.23 15:57:18 +0530

என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

சம்பவத்திற்கு முன்பாக என்னை தாக்கியவர்களின் பெயர் விவரங்கள் தெரியாது. அதற்கு முன்பு நான் அவர்களை பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்பும் பின்பும் சம்பவத்தில் ஈடுபட்ட நபர்கள் இவர்கள்தான் என அடையாளம் காட்ட அடையாள அணிவகுப்பு நடத்தி நான் காட்டவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரியின் பெயரோ நீதிமன்றத்திற்கு வராத நபரின் பெயரோ தெரியாது என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்பாக எதிரிகளின் சாதி குறித்து தெரியாது என்றால் அவர்கள் யார் என்றே தெரியாது. எதிரிகளுக்கும் எனக்கும் தனிப்பட்ட விரோதம் கிடையாது என்றால் சரிதான். எங்கள் கிராமத்திற்கும் சம்பவம் நடந்ததாக சொலலப்படும் வயல் காட்டிற்கும் சுமார் 1 கிமீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். மெயின்ரோட்டிலிருந்து கடலை பிஞ்சை காட்டுராஜா, தாவீது ஆகியோர்களது பிஞ்சையை தாண்டி 4,5 பிஞ்சைகளுக்கு அப்பால் உள்ளது என்றால் சரிதான். எனது கடலை பிஞ்சையில் மேய்ந்த மாடுகளுக்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு மது அருந்தும் பழக்கம் உண்டு என்றால் இல்லை. எனக்கு குடிப்பழக்கம் உள்ளது என்றும் வழக்கிற்காக அதை மறைக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு எழுதப்படிக்க தெரியாது என்றால் சரிதான். புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது என்றால் நான் சொல்ல சொல்ல என் மகன் எழுதினான். புகாரில் உள்ள ரேகையில் எனது கைவிரல் ரேகை என்பதை குறிக்கும் விதமாக எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் அடையாளம் தெரியாத 5 நபர்கள் தாக்கியதாகத்தான் சொல்லியுள்ளேன்

C MOHAN RAM Digitally signed by C MOHAN RAM Date: 2026.02.23 15:57:22 +0530

என்றால் சரியல்ல, 3 நபர்கள் தாக்கியதாகத்தான் சொன்னேன். நான் மதுபோதையில் கீழே விழுந்துவிட்டேன் என்றும் அதனால் ஏற்பட்ட காயத்தை வைத்து போலிசார் சொல்லிக்கொடுத்ததன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அடித்தது ஆஜர் எதிரிதான். நான் சொன்ன நேரத்தில், நாளில், விதத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் சாதி பெயரை சொல்லி திட்டவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல .

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.23 15:57:26 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No.22/2024**

அ.சா.2

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | வெள்ளையம்மாள் | Caste: | |
| Husband Name: | செல்லசாமி | Calling: | விவசாயம் |
| Village: | வடக்கு தெரு, பெரியகுளம் | Religion: | |
| Taluk: | கடலாடி | Age: | 70 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 23.02.2026

( 1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை .BNSS பிரிவு 355-ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

**முதன்மை விசாரணை**

நான் கடலாடி தாலுகா பெரியகுளம் தெற்கு தெருவில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 லிங்கத்தை தெரியும். சாட்சி மலைராஜை தெரியும். என் சித்தப்பா மகன். சாட்சிகள் தேவராஜ் , ஜெயசித்ரா, அரவிந்த் குமார் ஆகியோர்களை தெரியாது. அ.சா.1 பட்டியல் இனத்தை சேர்ந்த தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சேர்ந்தவர். ஆஜர் எதிரியை தெரியாது. கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பு தை மாதம் 13ம் தேதி எங்கள் ஊருக்கு வடக்கு திசையில் உள்ள எனக்கு சொந்தமான கடலை வயலில் வேலை செய்து கொண்டிருந்தேன். அதற்கு முன்பு இரண்டு, மூன்று நாட்கள் மாடுகள் வந்து லிங்கம் வயலிலும், எனது வயலிலும் மேய்ந்தது. இதுசம்பந்தமாக நான் லிங்கத்திடம் சொன்னேன். என்னால் உன் வயலில் மேயும் மாடுகளையும் விரட்ட முடியாது. உன் வயலை நீ வந்து பார்த்துக்கொள், என்னால் பார்த்துக்கொள்ள முடியாது

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.23 15:57:30 +0530

என்று சொன்னேன். அன்று மதியம் 1.00 மணியளவில் லிங்கம் அவரது வயலுக்கு வந்திருந்தார். நான் எனது வயலில் இருந்தேன். அப்போது நிறைய மாடுகள் லிங்கம் வயலுக்கு மேய்வதற்காக வந்தது. அதனை விரட்டிக்கொண்டு போனார். கொஞ்ச தூரத்தில் சண்டை போடும் சத்தம் கேட்டது. நான் என்ன ஏது என்று பார்க்க போனேன். அப்போது லிங்கம் சென்றுவிட்டார். இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார். வழக்கு கொடுத்த விவரம் எனக்கு தெரியாது.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**

வழக்கில் சம்பந்தப்பட்ட முனீஸ்வரன், செல்வம், மும்மூர்த்தி ஆகியோரை தெரியும் என்றும் அதே போல அவர்களுடைய சாதி விவரமும் எனக்கு தெரியும் வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதே போல் லிங்கம் மாடுகளை பத்திக்கொண்டு செல்லும்போது எதிரிகள் லிங்கத்தை வழிமறித்து என்ன சாதி என்று கேட்டு அவர் சாதி பெயரை சொல்லி அசிங்கமாக பேசி 1ம் எதிரி கையால் லிங்கத்தின் மூக்கில் குத்தி காயத்தை ஏற்படுத்திய விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. லிங்கம் சாயல்குடி காவல்நிலையத்தில் புகார் கொடுத்த விவரம் தெரியும், வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.23 15:57:34 +0530

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

இல்லை

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.23 15:57:39 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)